**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு.எண்.102/2015**
**நாள் : 12/01/2023, வியாழக்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பின் 1-வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் - வெங்கடேசன் | த/பெயர் - சாரங்க நாயுடு |
| வயது - 62 | தொழில் - |
| விலாசம் - எண்.84, குமரசிரளபாக்கம் கிராமம், பொன்னேரி தாலுக்கா. | |

**குறுக்கு விசாரணை (DW1)**

நான் படிக்கவில்லை. நிருபண வாக்குமூலம் ஆங்கிலம் உள்ளது என்றும், அது எவ்வாறு தயார் செய்யப்பட்டது என்றால் தெரியாது. எனது வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் நான் கையொப்பம் போட்டேன். நிருபண வாக்குமூலுத்தில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் தெரியுமா என்று கேட்டால் வண்டிக்காக ரூ.2,00,000/- கடன் வாங்கினேன். அதற்காக அடமானம் போட்டேன். நிருபண வாக்குமூலத்தில் ரூ.2,00,000/- குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அதை பார்த்து என்னால் பதில் சொல்ல முடியாது. வழக்கு சொத்துக்கள் தேவதானம் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் மொத்தம் 3 அயிட்டங்களாக உள்ளன. மொத்தம் 3 ஏக்கர் 50 சென்டு என்றால் சரிதான். 3 இடங்களும் பக்கம் பக்கமாக அமைந்துள்ளது. 3 அயிட்ட சொத்துக்களுக்கும் மதிப்பு ஒன்றுதான் என்றால் சரிதான். அந்த 3 சொத்தில் ஒரு சொத்து லஷ்மி என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். தாவா சொத்துக்களின் மூல ஆவணங்களை நான் தான் வாதியிடம் கொடுத்தேன். மற்ற இரண்டு சொத்துக்கள் பாகப்பிரிவினை மூலம் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வா.த.சா.ஆ.6 2001ல் பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2001ல் ஏக்கர் ரூ.48,000/-க்கு

கிரையம் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2005ல் தாவா சொத்து குறித்து ஏற்படுத்திய ஆவணம் சந்தை மதிப்பில் தான் ஒப்பந்தம் போட்டுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. எந்த ஒரு நபரும் ரூபாய் 2 லட்சத்திற்கு 3.5 ஏக்கர் விற்கமாட்டார்கள் என்று கூறும்பட்சத்தில் அப்போது சந்தை மதிப்பு என்ன என்று நீங்கள் குறிப்பிட்டு வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அடமானம் தான் போட்டேன். பத்திரங்கள் 2005ல் ஏற்பட்டது என்றால் சரிதான். பவர் பத்திரம் நீங்கள் ஏற்படுத்திக் கொடுத்ததை நிரூபண வாக்குமூலத்தில் ஒப்புக்கொண்டுள்ளீர்கள் என்றும், நீங்கள் பவர் பத்திரத்தில் தெரிந்துதான் கையொப்பம் போட்டுள்ளீர்கள் என்று சொன்னால் தெரியாது.

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**//கையொப்பம்//**
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பொன்னேரி.**